# காலம்

மணல் கடிகாரமே
எல்லா மணலும் சரிந்த பிறகு
உன்னை மீண்டும் தலை கீழாய்த் திருப்பி வைக்க யார் வருவார்?
காலமே
நான் குளித்த நதிகள் என்னைக் கடந்து
மெல்ல நகர்ந்து போய்க் கொண்டே இருக்கின்றன.
கடலில் கலந்த கங்கை
மறந்து போன தன் பெயரை நினைவுகூர முயன்று
மீண்டும் மீண்டும் தோற்கிறது.
என் சிவந்த இதயத்தைப் பழுக்க வைத்த
குளிர் காற்று என்னைக் கடந்து போய்
இப்போது தூரத்து மரத்தின் இலைகளை அசைப்பதை
நான் ஏக்கத்தோடு பார்க்கிறேன்.
நான் எழுத்துக் கூட்டிப் படித்த முதல் புத்தகம்
கட்டியணைத்து கொடுத்த முதல் முத்தம்
எதிர்பாராமல் என் முதுகில் பாய்ந்த முதல் கத்தி
என் ரத்தத்தைப் பார்த்து குதூகலித்த முதல் நண்பன்
உன் கையில் நான் ஒப்படைத்த எல்லாவற்றையும்
காலமே நீ என்ன செய்யப் போகிறாய்?
தூக்கம் கலைத்த தூரத்து ரயிலின் கூவல்
இப்போது தேய்ந்து மறைந்து
இருட்டில் தொலைந்து போனது.
காலமே
கடல் நடுவே ஆளரவமற்ற அருந்த நீரற்ற தீவில்

## என்னைக் கொண்டு போய் ஏன் குடி வைக்கிறாய்?

--- 20, ஆகஸ்டு 2020

